# இந்தியா ஜம்மு காஷ்மீர் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி என்று மீண்டும் வலியுறுத்தியது

**ஏப்ரல் 23, 2015**

ஜகார்த்தாவில் நடந்து வரும் ஆசிய ஆப்பிரிக்க உச்சி மாநாட்டில் தனது அறிக்கையில், தேசிய பாதுகாப்பு மற்றும் வெளியுறவு துறைக்கு பாக்கிஸ்தான் பிரதமருக்கு ஆலோசகராகா இருக்கும் திரு சர்டாஜ் அஜிஸ் காஷ்மீர் பற்றி கூறியது ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு குறிப்பாக இருந்தது. இதற்கு விடையிறுக்கும் வகையில், இந்திய பிரதிநிதி, திரு அனில் வாத்வா, செயலாளர் (கிழக்கு), முன்வந்து பின்வருமாறு கூறினார்:

“இந்தியாவுடன் ஒரு ஒருங்கிணைந்த பகுதி ஆகும் ஜம்மு & காஷ்மீர் மாநிலத்தை பற்றி இத்தகைய மனப்பாங்குடௌய கருத்துக்களை பாகிஸ்தான் மறுபடியும் கூற இது போன்ற ஒரு சர்வதேச மன்றத்தை பயன்படுத்த தேர்வு செய்தது மிகவும் துரதிர்ஷ்டவசமானது.

பாக்கிஸ்தான் பிரதிநிதிக்கு தெரிந்தது போல, ஜூலை 1972 ஷிம்லா ஒப்பந்தம், மற்றும் பிப்ரவரி 1999 லாகூர் பிரகடனத்தின் அடிப்படையில், இந்தியா மற்றும் பாக்கிஸ்தான் இருதரப்பு அமைதி பேச்சுவார்த்தை மற்றும் ஒத்துழைப்பு மூலம் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் தீர்வு காண கடமைப்பட்டுள்ளன அன்றி பண்டுங் நினைவு அஞ்சலிக்கான இந்த ஆப்பிரிக்க ஆசிய கூட்டம் போன்ற ஒரு பன்முக மன்றத்தில் செய்வது அல்ல"